www.Padasalai.Net

ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 முடிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.
(Pay Authorization for the month of April 2024 to June -2024)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

கடித(efile) எண்.10062/தொ.க.3(2)/2023-2, நாள் 30.04.2024

அனுப்புநர்
திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை - 01 / 08 / 35.
✓சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி - அனைவருக்கும் கல்வித் திட்டம் 2011-12-ஆம் கல்வியாண்டில் தொடக்கக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1581 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 5146 பணியிடங்களுக்கு 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு முடிவடைந்துவிட்டது - 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வெளியிடப்பட்டுள்ள நிலையில், அரசாணை பெற காலதாமதம் ஆகும் என்பதால் 01.04.2024 முதல் மேலும் 3 மாதங்கள் ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல்-சார்பு.

பார்வை:1. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வி (வ.செ.2) துறை, நாள். 02.12.2011.

2. அரசாணை (1டி) எண்.63, பள்ளிக் கல்வி (தொ.க.3(2)) துறை, நாள். 05.05.2021.

3. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.11671/கே4/ 2022, நாள் 26.04.2024.

-•-

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி 2011-2012-ஆம் கல்வியாண்டி தொடக்கக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1581 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 356

www.Padasalai.Net

இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 5146 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது. மேற்தெரிவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டு கடைசியாக பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது என பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார் .

2. மேற்கண்ட தற்காலிக ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 முடிய தொடர் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்ட ஆணை முடிவடைந்துள்ள நிலையிலும், 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) தொடக்கக்கல்வி இயக்குநரால் வழங்கப்பட்டு முடிவடைந்துள்ள நிலையிலும், நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்திடும் அரசாணை பெற காலதாமதம் ஆகும் என்பதாலும், 01.04.2024 முதல் மேலும் 3 மாதங்களுக்கு ஊதிய கொடுப்பாணை (Pay Authorization)வழங்குமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 5146 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களை (1581 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 3565 இடைநிலை ஆசிரியர்) நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்திட கோரும் தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில் மேற்காணும் 5146 தற்காலிக பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்கிட ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில்,அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

30/4/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசுச் செயலாளருக்காக

30.04.24

**நகல்**

தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.
சார்ந்த மாவட்ட கல்வி அலுவலர்கள்(தொடக்கக்கல்வி).
இருப்புக்கோப்பு / உதிரி.